# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 153/ந/2024
நாள்:.09.05.2025

| | | |
|---|---|---|
| திரு.வே.கணபதி பாலசுப்பிரமணியன்,<br>கடையநல்லூர். | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>கடையநல்லூர் நகராட்சி, கடையநல்லூர் | – | எதிர்மனுதாரர் |

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டுக்கீழத்தெரு, கதவு எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன், என்பவரின் 07.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 153/ந/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டுக்கீழத்தெரு, கதவு எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன், என்பவர் 07.08.2024 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சி, அட்டக்குளம் ஊரணி அருகில், சீவலங்கால்வாய் பகுதியில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் உள்ளது. இந்த இடத்தில் அரசு விதிமுறைகளை மீறி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு காவா அறக்கட்டளை என்ற பெயரில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டி நான் கடந்த 25.10.2022 அன்று தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மனு செய்தேன். இதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் எனது மனுவை தொடர் நடவடிக்கைக்காக கடையநல்லூர் வட்டாட்சியருக்கு அனுப்பினார். ஆனால் தமிழக அரசு நீர்நிலைகளை பாதுகாக்கும் வகையில் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம் 2007 (Tamilnadu protection of Tanks and eviction of encroachment Act, 2007) கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய கடையநல்லூர் வட்டாட்சியர் அவர்கள் எனது மனுவை நீர் வள

ஆதாரத்துறைக்கு அனுப்பியுள்ளார். இது தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் சட்டத்திற்கு முரணானதாகும்.

இதை தொடர்ந்து நான் 24.06.2023 அன்று அரசுக்கு சொந்தமான மேலே குறிப்பிட்ட நீர்நிலைகள் மற்றும் நீர்வழிப்பாதைகளில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் முழுமையாக வருவாய் துறை அரசாணை எண்.540–ன் படி அகற்ற தென்காசி கோட்டாட்சியர் அவர்களுக்கு புகார் செய்தேன். இதைத் தொடர்ந்து வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ஆக்கிரமிப்பை அகற்ற கடையநல்லூர் சிற்றாறு வடிகால் பிரிவு மற்றும் கடையநல்லூர் வருவாய் வட்டாட்சியர் ஆகியோரை கேட்டுக்கொண்டார். பல மாதங்கள் இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் 01.11.2023 அன்று ஆக்கிரமிப்பு அகற்றுவது சம்மந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலருக்கு மனு செய்தேன்.

இதை அடுத்து கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத்தகவல் அலுவலர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதியானது கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் ஆளுகையின் கீழ் வருவதால் ஆக்கிரமிப்பை அகற்ற ஆக்கிரமிப்புதாரர் பெயர் விபரம் மற்றும் ஆக்கிரமிப்பு வரைபடம் ஆகியவை இணைத்து கடையநல்லூர் நகராட்சி ஆணையாளருக்கு 13.12.2023–ன் படி கடித வரைவு அனுப்பப்பட்டுள்ளதாக விபரம் தெரிவித்தார்கள். தொடர்ந்து மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவது குறித்து கடையநல்லூர் நகராட்சி மேற்கொண்ட நடவடிக்கை குறித்து நான் தகவல் கோரியதில் விரைவில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என 28.02.2024 அன்று தகவல் தெரிவித்தார்கள். ஆனால், இதுநாள் வரை ஆக்கிரமிப்பை அகற்ற நகராட்சி நிர்வாகத்தால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு உயர்நீதிமன்ற ஆணையின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், நீர்நிலை ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து, அனைத்து மாநகராட்சி, நகராட்சி ஆணையர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கிய போதிலும் கடையநல்லூர் நகராட்சி நிர்வாகம் இதை கண்டுகொள்ளாமல் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஆதரவாக செயல்படுவதால் பல இலட்சம் மதிப்புள்ள அரசு நிலம் மீட்கப்படாமல் உள்ளது.

எனவே, மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் இது குறித்து விசாரணை மேற்கொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற கடையநல்லூர் நகராட்சி நிர்வாகத்திற்கு உத்தரவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.09.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் கடையநல்லூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது 05.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"Notice served to the encroacher on 07.10.2024 to remove the encroachment of Fencing and TinShed (in Attakulam Oorani Street,Ward F, Block 13, Town Survey No.91 measuring about 18.45 x 9.7) vide under section 128(1) of the Tamil Nadu Local Bodies Act, 1998. After removal of the encroachment, final Statement will be submitted soon"

அதாவது:-

"நகராட்சி எல்லைக்குட்பட்ட அட்டகுளம் ஊரணி தெரு, வார்டு.F, பிளாக் 13 நகரளவை எண்.91 சுமார் 18.45 x 9.7 அளவில் தகரசெட் மற்றும் கம்பிவேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 பிரிவு 128(1)–ன் கீழ் ஆக்கிரமிப்புதாரர்க்கு 07.10.2024 அன்று ஆக்கிரமிப்பு அகற்ற அறிவிப்பு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்றும் ஆக்கிரமிப்பு அகற்றம் பற்றிய விவரம் விரைவில் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படும்'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் கடையநல்லூர் நகராட்சி ஆணையரும் 20.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன் 20.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கடையநல்லூர் நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பகுதியில் ஏராளமான ஆக்கிரமிப்புகள் உள்ளது. நகரின் பிரதான பகுதியில் அத்துமீறி கட்டப்பட்டுள்ள, காவா டிரஸ்ட் என்னும் கட்டிடதை அகற்ற நான் கோரிக்கை வைத்தேன். அந்த பகுதி நகராட்சிக்கு சொந்தமானது என கடையநல்லூர் வட்டாட்சியரும் சான்று வழங்கியுள்ளார். ஆனால் ஒரு ஆண்டாகியும் நகராட்சி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடைநயல்லூர் நகராட்சி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. இத்துடன் நகராட்சியில் ஆக்கிரமிப்பு குறித்து அரசு உத்தரவுப்படி பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை. எனவே காவா டிரஸ்ட் ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளை C.P.எண்.1289/2019 மற்றும் W.P.(MD) எண்.22163/2018–ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பான நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்தி ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து கடையநல்லூர் நகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் 20.01.2025 நாளிட்ட எனது எழுத்துமூல வாக்குமூலத்தை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. கடையநல்லூர் நகராட்சி ஆணையர் 20.01.2025 அன்று விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

"கடையநல்லூர் நகராட்சிப்பகுதியில் அட்டக்குளம் ஊரணி தெருவில் காவா அறக்கட்டளை என்ற பெயரில் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

ஆக்கிரமிப்பு குறித்து 07.01.2025–ஆம் நாளன்று மேற்படி ஆக்கிரமிப்புகளை 15 நாட்களுக்குள் அகற்ற வேண்டுமென நகராட்சியால் சம்மந்தப்பட்டவர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. 15 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பு அகற்றவில்லையெனில், காவல்துறையின் துணையோடு மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

மேலும் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது 07.03.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"Notice served to the encroacher on 07.10.2024 to remove the encroachment of Fencing and Tin Shed (in Attakulam Oorani Street, Ward.F. Block 13, Town Survey No.91 measuring about 18.45x9.7. In continuous second notice issued vide under section 128(2) of the Tamil Nadu Local Bodies Act, 1998 . Notice Issued date on 11.12.2024. Now the Encroacher sent a report to Municipal Commissioner, Kadayanallur. Encroachment was not a private encroachment, it is only Trust Encroachment. We have initiated police for protection on 28.02.2025 but they were unable to provide protection on the said date. We have again requested the police to give protection on 19.03.2025. After removal of the encroachment final statement will be submitted soon."

அதாவது:-

"நகராட்சி எல்லைக்குட்பட்ட அட்டகுளம் ஊரணி தெரு, வார்டு.F, பிளாக் 13 நகரளவை எண்.91 சுமார் 18.45 x 9.7 அளவில் தகரசெட் மற்றும் கம்பிவேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 பிரிவு 128(1)–ன் கீழ் ஆக்கிரமிப்புதாரர்க்கு 07.10.2024 அன்று ஆக்கிரமிப்பு அகற்ற அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 128(2)ன்படி இரண்டாவது அறிவிப்பு 11.12.2024 அன்று வழங்கப்பட்டது. அதற்கு ஆக்கிரமிப்பாளர், இது தனியார் ஆக்கிரமிப்பல்ல, அறக்கட்டளையின் ஆக்கிரமிப்பாகும் என தெரிவித்துள்ளார். எனவே 28.02.2025 அன்று ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு காவல்துறையின் பாதுகாப்பு கோரப்பட்டது. ஆனால் அன்றைய தேதியில் காவல்துறையினரால் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. எனவே நகராட்சியால் மீண்டும் ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு 19.03.2025 அன்று பாதுகாப்பு கோரி காவல்துறைக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது எனவும் ஆக்கிரமிப்ப அகற்றியவுடன் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் " என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது புகார் மனுவில் தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சி, அட்டக்குளம் ஊரணி அருகில், சீவலங்கால்வாய் பகுதியில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தில் அரசு விதிமுறைகளை மீறி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு காவா அறக்கட்டளை என்ற பெயரில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது என்றும் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளை C.P.எண்.1289/2019 மற்றும் W.P.(MD) எண்.22163/2018–ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பான நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்தி ஆக்கிரமிப்பு அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆக்கிரமிப்புதாரருக்கு 07.10.2024 மற்றும் 07.01.2025 ஆகிய தேதிகளில் நோட்டீஸ் வழங்கி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

எனவே இந்நிலையில் நகராட்சி ஆணையர் கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட அட்டக்குளம் ஊரணி தெருவில் காவா அறக்கட்டளை என்ற பெயரில் ஆக்கிரமிப்பு செய்துள்ளது தொடர்பான புகார் குறித்து, கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறு கடையநல்லூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, மே 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.வே.கணபதி பாலசுப்பிரமணியன்,
எண்.3, பவுண்டுக் கீழத்தெரு,
மேலக்கடையநல்லூர்.
கடையநல்லூர் – 627 751.
தென்காசி மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர்.
தென்காசி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், MRC நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், MRC நகர், சென்னை – 600 028.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/5/25

செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032